ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2443/34 - 2025 ජූලි මස 01 වැනි අඟහරුවාදා - 2025.07.01

2443/34 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: MUN/LND/PMTAQ/05/04/02.
காணி அமைச்சின் குறிப்பு இல.: 4-3/8/2011/PC/185.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டம், முந்தல் பிரதேச செயலாளர் பிரிவில், இல. 601/B, நல்லாந் தலுவ கிராம அலுவலர் பிரிவில் நல்லாந்தலுவ கிராமத்தில் அமைந்துள்ள ஆ.வ.410236 இல் ஆரம்ப வரைபடத்தில் காணப்படுகின்ற பின்வரும் காணித் துண்டின் விபரங்கள் பின்வருமாறு:

**1. துண்டு இல. 1**

காணியின் பெயர்: நல்லாந்தலுவ ஜும்மா பள்ளி இடம்; உரிமை கோருபவர்: தலைவர், நல்லாந்தலுவ ஜும்மா பள்ளி, நல்லாந்தலுவ, மதுரங்குளி; விஸ்தீரணம்: 0.1528 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 08 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு முந்தல் பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும்


*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 01 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

எம். ஏ. ஐ. எச். பெரேரா,
பிரதேச செயலாளர்
முந்தல்.

பிரதேச செயலகம்,
முந்தல்,
2025, யூன் 24.

EOG 07 - 0010

---

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

குறிப்பு இல.: 4/3/4/2013/D/494.
பிரதேச செயலாளரின் குறிப்பு இல.: பிசெ/அக்/5/9/01.

ஒரு பொதுத் தேவைக்கு வேண்டியதான கீழ்க் காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தல் (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட் பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக்கின்றேன்.

**எடுத்துக் கொள்ளவிருக்கும் காணியின் விபரம்:**

தென் மாகாணத்தில் காலி மாவட்டத்தில் அக்மீமன பிரதேச செயலாளர் பிரிவில், இலக்கம் 112 ஏ, வலஹந்தூவ கிராம அலுவலர் பிரிவில் வலஹந்தூவ கிராமத்தில் அமைந்துள்ள காலி மாவட்ட நில அளவையாளர் நாயகத்தினால் தயாரிக்கப்பட்ட இலக்கம் கா. அ. இலக்கம் 810239, வலய இலக்கம் 04, தாள் இலக்கம் 1 மற்றும் 2024.12.31 ஆந் திகதியிட்ட வரைபடத்தில் காட்டியுள்ள 0.6070 ஹெக்டயார் விஸ்தீரணம் உள்ள கீழ் விபரிக்கப்பட்டுள்ள 02 காணித்துண்டுகளின் விபரங்கள் பின்வருமாறு:

**1. துண்டு இல. 1 - காணியின் பெயர்: வலஹந்தூவவத்த; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.0203 ஹெக்டயார்**

வடக்கு: காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் வலஹந்தூவவத்த (உ.வ. 83106 மற்றும் 83108); கிழக்கு: காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் வலஹந்தூவவத்த (உ.வ. 83108); தெற்கு: காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் வலஹந்தூவவத்த (உ.வ. 83108 மற்றும் 83106); மேற்கு: காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் வலஹந்தூவவத்த (உ.வ. 83108 மற்றும் 83106) மற்றும் இத்தாளில் துண்டிலக்கம் 2.

**2. துண்டு இல. 2 - காணியின் பெயர்: வலஹந்தூவவத்த; உரிமை கோருபவர்: அரசு; விஸ்தீரணம்: 0.5867 ஹெக்டயார்**

வடக்கு: காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் வலஹந்தூவவத்த (உ.வ. 83107 மற்றும் 83106) இத்தாளில் துண்டிலக்கம் 1 மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் வலஹந்தூவவத்த (உ.வ. 83108); கிழக்கு: காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் வலஹந்தூவவத்த (உ.வ. 83106) இத்தாளில் துண்டிலக்கம் 1 மற்றும் காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் வலஹந்தூவவத்த (உ.வ. 83108 மற்றும் 83107); தெற்கு: காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் வலஹந்தூவவத்த (உ.வ. 83107); மேற்கு: காணி மறுசீரமைப்பு ஆணைக்குழு உரிமை கோரும் வலஹந்தூவவத்த (உ.வ. 83107 மற்றும் 83106).

மேற்குறித்த காணிகளுக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்து மூலம் அதிகாரமளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 24 ஆந் திகதி மு.ப. 10.00 மணிக்கு அக்மீமன பிரதேச செயலாளர் அலுவலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும், அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நட்டஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும் நட்ட ஈட்டுத் தொகையையும் அத் தொகை கணிக்கப்பட்ட விதத்தையும் 2025 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

ரீ. ஜி. எஸ். சஜீவனி,
பிரதேச செயலாளர்
அக்மீமன.

பிரதேச செயலகம்,
அக்மீமன,
2025, யூன் 20.

EOG 07 - 0011

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.